பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 07 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. மேற்குவங்க மாநிலத்தில் உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்துக்கு உத்வேகம் அளிக்கும் வகையில், புதிய சாலை மற்றும் ரயில் போக்குவரத்துத் திட்டங்கள் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. கிராமப்புறங்களில் விளையாட்டை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இளைஞர்கள் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் 153 சிறப்பு மருத்துவ சேவை மையங்கள் மூலம் மாலை நேரத்தில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

5. பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப்போட்டிகளின் நீச்சல் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--இனி விரிவான செய்திகள்---

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்துக்கு உத்வேகம் அளிக்கும் வகையில், புதிய சாலை மற்றும் ரயில் போக்குவரத்துத் திட்டங்கள் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தின் துர்காபூரில் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கிவைத்து பேசிய பிரதமர், இந்த திட்டங்கள் போக்குவரத்து கட்டமைப்பை வலுப்படுத்துவதுடன், எரிவாயு சார்ந்த பொருளாதாரத்திற்கும் உத்வேகம் அளிக்கும் என்று தெரிவித்தார்.

இம்மாநிலத்தில்தான் அதிக அளவில் வந்தேபாரத் ரயில்கள் இயக்கப்படுவதாக கூறிய பிரதமர், எஃகு நகரம் என்று போற்றப்படும் துர்காபூரில் உள்ள தொழிலாளர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக, பீகார் மாநிலம் மோத்தி ஹாரியில், 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்தார்.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்துள்ள 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் அம்மாநிலத்தின் வளர்ச்சிப்பாதையில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கியிருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், துர்காபூர் - கொல்கத்தா இடையே 132 கிலோமீட்டர் தூரத்திற்கு செறிவூட்டப்பட்ட இயற்கை எரிவாயு குழாய், **'Kotshink '** ரயில் பாதை உள்ளிட்ட திட்டங்கள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

கிராமப்புறங்களில் விளையாட்டை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உலக அளவிலான காவல்துறை போட்டிகளில் பங்கேற்ற இந்திய வீரர்களுக்கு பாராட்டு தெரிவிக்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், குழந்தைகளுக்கு அவர்களின் வயது அடிப்படையில் விளையாட்டு பயிற்சிகளை அறிவியல் பூர்வமாக அளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் விளையாட்டுத்துறைக்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீடு ஐந்து மடங்கு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபெறும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்களுக்கு மாதந்தோறும் 50 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்த ஒலிம்பிக் போட்டியில் இந்தியா அதிக பதக்கங்களை பெற்று, முதல் ஐந்து இடங்களுக்குள் இடம்பெறும் என்று திரு அமித் ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<>>>>>

படைப்பாற்றல் நிறுவனங்களுக்கு உத்வேகம் அளித்து, இளைஞர்களுக்கான வாய்ப்புகளை பெருக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று அகில இந்திய படைப்பாற்றல் தொழில்நுட்ப கல்லூரியை அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நாவிஸுடன் இணைந்து தொடங்கிவைத்தபின் உரையாற்றிய அவர், படைப்பாற்றல் தொழில்நுட்ப கல்லூரியை மேம்படுத்த மத்திய அரசு 400 கோடி ரூபாய் அனுமதித்துள்ளதாக தெரிவித்தார்.

இதில் சேரும் இளைஞர்களுக்கு 17 பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

படைப்பாற்றல் தொடர்பான தகவல்களையும், பயிற்சியும் வழங்குவதற்கு கூகுள், மெட்டா, அடோப் ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளைஞர்கள் ஆக்கப்பூர்வ பங்களிப்பை வழங்க வேண்டும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

தில்லி அருகே நொய்டாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் பேசிய அவர், தேசத்தை கட்டமைக்கும் பணிகளை இளைஞர்கள் தங்களது கடமையாகவும், முன்னுரிமைப்பணியாகவும் கருதி அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இளைஞர்கள் எந்த வேலையில் சேர்ந்தாலும், பிறருக்கு நலன் பயக்கும் வகையில் அதில் கவனம் செலுத்துமாறும் அவர் அறிவுறுத்தினார்.

இளைஞர்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் ஆசிரியர்கள் மற்றும் முன்னோடிகளின் பங்களிப்புக்கு திரு பியூஷ் கோயல் பாராட்டு தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டில் உலகத்தரத்திலான சாலை மற்றும் போக்குவரத்து கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை இணையமைச்சர் திரு ஹர்ஷ் மல்கோத்ரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மாநாடு ஒன்றில் பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில் உள்ள முக்கிய நகரங்களுடன் இணைப்பு வசதியை ஏற்படுத்தவும், மக்களுக்கு அதிகாரம் அளித்து வளர்ச்சிப்பணிகளை விரைவுப்படுத்தவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

சாலை அமைக்கும் பணிகள் இதுவரை இல்லாத அளவுக்கு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 2014-ஆம் ஆண்டில் 91 ஆயிரம் கிலோமீட்டராக இருந்த தேசிய நெடுஞ்சாலை கட்டமைப்பு தற்போது ஒரு லட்சத்து 46 ஆயிரம் கிலோமீட்டர் அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா உலகிலேயே இரண்டாவது மிகப்பெரிய சாலை கட்டமைப்பைக் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

சினிமா, டோலமைட் சுரங்கம், சுண்ணாப்புக்கல் சூளை, பீடி சுற்றுதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இவ்வாண்டு கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என்று மத்திய அரசின் தொழிலாளர் நலத்துறை, அறிவித்துள்ளது.

**scholarships.gov.in** என்ற தேசிய கல்வி உதவித்தொகை இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்கலாம்.

ஒன்று முதல், 10-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அடுத்த மாதம் 31-ஆம் தேதிக்குள் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மேல்நிலை கல்வி மற்றும் உயர்கல்வி பயிலும் மாணவர்கள் அக்டோபர் 31-ஆம் தேதிக்குள் தங்களது விண்ணப்பங்களை இணையதளத்தில் சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

மதுபான முறைகேடு தொடர்பான வழக்கில் சத்தீஷ்கர் முன்னாள் முதலமைச்சர் திரு பூபேஷ் பாஹலின் மகன் திரு சைதன்யாவை அமலாக்கத்துறையினர் இன்று கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பாக, ராய்ப்பூர், பிலாய் உள்ளிட்ட இடங்களில் அமலாக்கத்துறையினர் மேற்கொண்ட சோதனைக்குபிறகு அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

**<<<<<>>>>>>**

ரயில்வே பணிநியமன முறைகேடு தொடர்பான வழக்கு விசாரணைக்கு தடை விதிக்கக்கோரி ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு லாலு பிரசாத் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு ஏற்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

திரு லாலு பிரசாத் ரயில்வே அமைச்சராக இருந்தபோது மேற்கொள்ளப்பட்ட பணிநியமனங்களுக்காக நிலம் பெற்றது தொடர்பான வழக்கில், அவர் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதிபதி திரு எம் எம் சுந்தரேஷ் தலைமையிலான அமர்வு இதுதொடர்பாக தில்லி உயர்நீதிமன்றத்தை அணுகுமாறு உத்தரவிட்டுள்ளது.

ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் முறையான அனுமதி பெறாமல் தமக்கு எதிராக முதல் தகவலறிக்கை பதிவு செய்யப்பட்டிருப்பதால் அதற்கு தடை விதிக்கக்கோரி திரு லாலு பிரசாத் தாக்கல் செய்த மனுவை விசாரித்த தில்லி உயர்நீதிமன்றம், விசாரணை நீதிமன்றத்தை அணுகுமாறு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.

**<<<<<>>>>>>**

லடாக் யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநராக திரு **Kavinder Gupta** இன்று பதவியேற்றுக்கொண்டார்.

**Leh** -வில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு **Arun Palli** அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

**<<<<<>>>>>>**

தமிழகத்தில் 153 சிறப்பு மருத்துவ சேவை மையங்கள் மூலம் மாலை நேரத்தில் தனியார் சிறப்பு மருத்துவர்களை கொண்டு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 11 கோடி ரூபாய் மதிப்பில் மருத்துவ சேவை மையங்களை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

***(Voice Byte ' – மா. சு – 45 Sec.)***

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை குறித்த விழிப்புணர்வு தமிழக மக்களிடையே அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த திரு மா. சுப்பிரமணியன், நாட்டிலேயே தமிழகம் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருவதாக கூறினார்.

**<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப்போட்டிகளின் நீச்சல் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 200 மீட்டர் ஃபிரி ஸ்டைல் பிரிவில் முதலிடம் பிடித்ததன் மூலம் அவர் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

**<<<<<END>>>>>>**